ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अनेकशास्त्रं बहु वेदितव्यंस्वल्पश्चकालो बहवश्च विघ्नाः ।
ग्राह्यं ततः सारमपास्यफल्गु हंसोवयः क्षीरमिवांबुमध्यात् ॥

சாஸ்திரங்கள் பலவிருக்கின்றன. அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களும் அதிகமாகவே இருக்கின்றன. காலமோ, அற்பமாகயிருக்கிறது. பற்பல இடையூறுகளு மேற்படுகின்றன. ஆகையால், அன்னபக்ஷியானது பாலுடன்கலந்த நீரைவிலக்கி, பாலைமாத்திரம் கிரகிப்பதுபோல் அதிகபாகத்தைவிட்டு ஸாரமான விஷயத்தை கிரகிக்க வேண்டும்.

மானிடப்பிறவியையடைந்த நம்போன்றவர்களுக்கு பிறப்பிறப்பாலேற்படும் கஷ்டங்களை விலக்கவேண்டி, அதற்குரிய ஸாதனங்களைபோதிக்கும் சாஸ்திரங்களை யறிந்துகொள்ளவேண்டியது முக்கியமானாலும், அந்த சாஸ்திரங்களும், அவைகளிலிருந்தும் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்களும் எவ்வளவோ இருக்கின்றன. நம் சரீரஸ்திதியையும் ஆயுளையும் கவனித்தால் அற்பகாலந்தானிருக்கிறது. இதை யுத்தேசித்து நாம் சீக்கிரமாய் விஷயங்களை யறியமுயன்றால், பலவாறான விக்னங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆகையால், மந்தாதிகாரிகளுக்காக புறமதஸ்தர்களின் ஆக்ஷேப ஸமாதானங்களுடன் சாஸ்திரங்கள் விஸ்தாரமாயிருந்தபோதிலும் ஹம்ஸமானது, எப்படி நீருடன் கலந்திருக்கும் பாலை, நீரைவிலக்கி ஸாரமாகச் சாப்பிடுகின்றதோ அவ்விதமே, நீர்போன்ற புறமதவாதங்களையும் அவைகளுக்குரிய ஸமாதானங்களையும் விலக்கி, க்ஷீரம்போல் ஸாரமான நமதுக்கநிவர்த்திக்குவேண்டிய ஸாதனங்களைமாத்திரம் சாஸ்திரங்களிலிருந்து ஆசார்யமுகமாய்க் கிரகித்து அவைகளால் நற்கதியடைவது இப்பிறப்பிற்கு முக்கியமான பயன்.

ஆர்யதர்மம்.

துந்துபி-ஹு பங்குனி-மீ ௨௧௨

தற்கால நிலைமை.

गुरुशिष्यसंप्रदाये दूरोत्सन्नेकलेर्बलादखिले ।
श्रुतिरियमियमिहच स्मृतिरयमर्थस्तत्वमेतदिति नष्टम् ॥१॥
वर्णास्तदीयधर्मा वेदविभागस्तदर्थविवृतिश्च ।
आचारा अपि चैषामुपदेष्टारश्चनवनवा जाताः ॥२॥
आधुनिकै ऋषिमानिभिरारब्धाः केऽपिकेऽपिच ग्रन्धाः ।
किमिह वचोभिरनेकैरधरोत्तरमार्यपूर्वमतमखिलम् ॥३॥
वैकुण्ठः स च भगवानाशु महीतलमिदं स्वयं प्राप्य ।
वैदिकमतंचधर्मं रक्षत्विति तं सदार्थयेमहितम् ॥४॥

கலியின மகிமையால் குரு, சீடன் இவர்களுக்கு இருக்க வேண்டிய கிரமமானது வெகுதூரம் விலகிவிட்டது. இது சுருதி, இது ஸ்மிருதி, இது தான் அவைகளின் உண்மையான கருத்து, என்கிற இவையாவும் நஷ்டமாயின. ஜாதிகள், அவைகளுக்குரிய தர்மங்கள், வேதங்களின் பிரிவு, அவைகளுக்கு அர்த்தவிவரணம், இக்காலத்திய ஜனங்களுடைய ஆசாரம், இந்த ஜனங்களுக்கு தர்மாதர்மங்களை உபதேசிக்கும் ஆசாரியர்கள் இவைகள் எல்லாம் காலத்திற்கொத்தகோலம் என்பது போல் புதிதுபுதிதாக ஏற்பட்டிருக்கின்றன. தற்காலத்திய சிலர், தங்களை ரிஷிகளாக எண்ணிக்கொண்டு, சிற்சில கிரந்தங்

களையும் இயற்றிவருகிறார்கள். அதிக வார்த்தைகளை விரிப்பதால் யாது பயன்? ஆர்யர்களின் ஸனாதன தர்மமானது நேர்விரோதமாய் மாறிவிட்டது.

முற்காலத்தியவர்கள் எவ்வித புத்திமான்களாயிருந்தபோதிலும் ஒருவித வைதிகவித்தையில் பயிற்சியடைய வேண்டும் என்கிற விருப்பமிருந்தால் ஆசார்யர்களின் அருகிற்சென்று, அடிபணிந்து, மிகுந்த பக்தியுடன் அவர்களை தமக்கு உபதேசிக்கவேண்டுமென்று வேண்ட, கருணாநிதிகளான அந்த குருக்களும், சீடர்களுடைய பக்திசிரத்தையைக்கண்டு மிகுந்த சந்தோஷங்கொண்டு, அன்புடனழைத்து அனுக்கிரக பூர்வகமாய் உபதேசிப்பார்கள். அவ்வித உபதேசத்தைப் பெறவேண்டி, குருகுலவாஸம்செய்யும் சிஷ்யர்களும், गुरुशुश्रूषयाविद्या என்கிற சாஸ்திரானுஸாரமாய் ஒவ்வொருதினமும் அவர்களின் வைதிக கர்மாக்களுக்கு வேண்டிய காரியங்களைத் தங்களாலியன்றமட்டும் நடத்தி, வித்யாபூர்த்தியானவுடன் ஆசார்ய ஸந்நிதியில் வந்தனம்செய்து, அவர்களின் அனுக்கிரஹபூர்வமாய் தம் கிரஹம்செல்வது வழக்கம். தற்காலத்திலோ கலியின் மகிமையால் அவரவர்கள் முற்காலத்து மூடர்களைப்போல் ஆசார்யாளைத் தேடிச்சென்று, அவர்களின் முன்னிலையில் வாடிவருந்தி, அவர்களிட்ட கட்டளையைச் சட்டமாய் நடத்துவது முதலான கஷ்டங்களைத் தங்களுக்கு அனுபவிக்கவேண்டியது அவசியமில்லையென்றும், புத்தியின் கூர்மையால் சகலசாஸ்திரார்த்தங்களும் நன்கறிந்தாகிவிட்டதென்றும், இனி தெரிந்துகொள்ளவேண்டியது ஒன்றுமில்லையென்றும், தீர்மானித்துக்கொண்டிருக்கிறார்கள். இக்கருத்தையே,

विनाशास्त्रं विनाचार्यं विना ज्ञानं विनाश्रमम् ।
सर्वज्ञा येन सर्वे तं कथं ब्रूमः कलिं वयम् ॥ என்று

ஓர் கவி, கலிமகிமையைக் கூறுமிடத்தில் நிரூபித்திருக்கிறார். யாராகிலும் ஒருவர் விதிப்படி குருகுலம்சென்று படித்தால்,

அவரைப் பிராசீனமென்று பரிஹஸிக்கிறார்கள். மேலும், தம்மிடம் யாசகத்திற்குவரும் போலிபண்டிதர்களை விவாகவிஷயத்தில் உங்கள் மனு என்னசொல்லுகிறார்? வைத்தியனாத தீக்ஷிதர் இந்தவிஷயத்தில் பிதற்றுகின்றார், யாக்ஞவல்க்யர் சொல்வதும் சரியல்ல, நீர் என்னசொல்கிறீர்? என்று, குற்றவாளிகளான கைதிகளை கோர்ட்டில் கூட்டில் நிருத்தி கடுமையாய் விசாரிப்பதுபோல், நிருத்திவைத்து சிலர் விசாரிக்கும்பொழுது, பணப்பேயால் பீடிக்கப்பட்டு மதிமயச்சம்கொண்டு உண்மையான சாஸ்திரார்த்தங்களைச் சொன்னால் இவருடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாகும். அதினால் நாம் இவரிடம் எதிர்பார்த்து வந்த, இரண்டணா ஒருசமயம் கிடைக்காமல் போய்விடுமோவென்று சங்கித்துத் தம் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் இரண்டணாவுக்கு ஆசைப்பட்டு அவர்கள் சொல்வதையே சரியென்று தானுமங்கீகரித்து 5 நிமிஷத்தில் அநேகஜன்மாக்களில் கொடிய நாகங்களை யனுபவிக்கக்கூடிய பாபங்களைச் சம்பாதிக்கிறார்கள். யாசகத்திற்காக வருகிறவர்களை அதட்டி உருட்டிக்கேட்டுத் தமக்குத் தோன்றியதையே சாஸ்திரார்த்தமென்று அவர்களும் உளரவே இனி பரமேசுவரன் வந்தாலும் சாஸ்திரங்களில் நம்மைவெல்ல முடியாதென்றும் நாம்தான் சர்வக்ஞனென்றும் தீர்மானித்துவிடுகிறார்கள், இவ்விதமிருப்பவர்களுக்கு உபதேசமுறையில் வரவேண்டிய ரகஸ்யார்த்தங்கள் ஒன்றும் தெரியாததோடு, சுருதி என்றால் அதன் ஸ்வரூபம் இவ்விதம், ஸ்மிருதி என்றால் இவ்விதம், இவைகளின் உண்மையான கருத்து இது தான், என்கிற இவையாவும் மறைந்துவிட்டன.

வர்ணாச்ரம தர்மங்களுடைய வியவஸ்தைக்கு முக்கிய ஆதாரங்களான சுருதி, ஸ்மிருதி முதலிய பிரமாணங்கள்மாறவே ஜாதிகளும், அவைகளுக்கு உரியதர்மங்களும், வேதங்களின் உட்பிரிவுகளும், அவைகளுக்கு அர்த்தவிவரணம் செய்வதும், இப்போது இருப்பவர்களுடைய ஆசாரமும், இவர்களுக்குத் தர்மோபதேசம் செய்யும் ஆசார்யர்களும், புதிதுபுதிதாக ஏற்

பட்டிருக்கின்றார்கள். மனு, யாக்ஞவல்க்யர், வசிஷ்டர் முதலான மகரிஷிகளைப்போல் தங்களையும், கலிகாலத்தில் தர்மஸ்தாபனார்த்தமாய் அவதரித்த மகரிஷிகளென்று எண்ணங்கொண்ட சிலர், பலநூற்களையும் இயற்றிவருகின்றார்கள். அதிக வார்த்தைகளால் விவரிப்பதில் யாது பயன்? அனாதிகாலந்தொடங்கி ஆர்யர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவந்த மிகச்சிறந்ததான ஸனாதனதர்மமும் ஆர்யமதமும் நேர்விபரீதமாய் மாறுதலடைந்திருக்கின்றன. வைகுண்டவாசியான ஸ்ரீபகவான் ராமகிருஷ்ண அவதாரங்களால் கீதாசாஸ்திரத்தில் கூறப்பட்ட,

• धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ।

என்கிற வசனத்தின் கருத்திற்கிணங்க ஸனாதனதர்மத்திற்கு ஏற்பட்டயிடையூறை விலக்கி, தர்மஸ்தாபனம் செய்ததுபோல் இந்தசமயமும் கூடியசீக்கிரம் இவ்வுலகில்தோன்றி, வைதிக மதத்தையும், தர்மத்தையும் ஸ்தாபனம் பண்ணவேண்டுமென்று எப்பொழுதும் அந்த பிரபுவையே பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம்.

சுபம்.

ஸ்ரீ வரங்கரிஷி சரிதம்.

பூவுலகத்துள் புண்ணிய தீர்த்தங்களும், புண்ணிய மூர்த்திகளும், புண்ணிய க்ஷேத்திரங்களும் ஆங்காங்கு பிரகாசித்தோங்கி விளங்கும் பாதகண்டத்திலே, சோழமாநாட்டிலே, விஜயமாநகர க்ஷேத்திரத்திலே, மாத்வப்பிராம்மண வருணத்திலே, ஸ்ரீவரங்கரிஷி திருவவதரித்துப் பிர்மச்சரிய ஆசிரம நெறி வழுவாது தூய்மை பெற்றிருந்தனர்.

இவர், ஸ்ரீமகாவிஷ்ணுவை, ஆயர்பாடியில் தேவகி தேவியாருக்குப் புத்திரனாகப்பிறந்து குழந்தைரூபமாக விளையாடிக்

காட்சிதந்தருளிய பாலகோபால ரூபத்துடன் தெரிசிக்கப்பே ராவல் கொண்டு, பூஜாமுகத்தில் கண்களைமூடி மனதில் தியானம் செய்துகொண்டு வெகுநீண்டகால மெதிர்பார்த்திருந்தார். இவர் ஒருநாள் பூஜைசெய்து தியானத்திலிருக்குஞ்சமயம் பகவான் சர்வாபரண பூஷிதராய், கண்டோர் மனத்தைக் கவர்ந்தானந்த பரவசமாக்குங் கோலாகலமாகக் கூத்தாடி, மழலைச் சொல்லால் செவிக்கின்பமூட்டி, விளையாடி யோடி, இவரையாலிங்கனஞ்செய்து, இவர் மடிமேலுமேறி யுட்கார்ந்திருந்திடவே, எக்குழந்தையோ நம் தியானத்தைப் பங்கப்படுத்துகிறதென்றெண்ணித் தன் மடியிலேறியிருந்த திவ்யமங்கள விக்ரகமாகிய பாலகோபாலர் திருவடியைப் பார்த்து நேத்திரானந்தமுறாது கண்களைத்திறவா திருந்தபடியே தன் புறங்கையால் தள்ளி, குழந்தாய்!! பூஜா காலத்தில் இடையூறு செய்யாமல், நீசும்மா விருந்தாலுனக்குப் பால், பழம் பிறகுதருவேன், எனச் சொல்லியதட்டிடவே, குழந்தையாய் தெரிசனந்தர வந்த ஸ்ரீபகவான், மழலைச்சொல்லால் தபஸ்ஸை நிறுத்தென்று திருவாய் மலர்ந்தருளி நீ! என்னைப் புறங்கையால் தள்ளினமையா லினி எவ்வண்ணங்கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலுங் குழந்தை வடிவையுனக்குக் காண்பிக்கிறதில்லை யென வினவிடுஞ் சத்தங்காதிற்கேட்டுக் கண்களை இவர் திறக்கவும், மின்ன லொளியைப்போல் தன்னுருவங்காட்டி மறைந்து நின்று, என் பின்னோடு வந்தா லனந்தலானந்த சயனமாய்த் தெரிசனந் தந்தருளுவேன் என அசரீரி வாக்கருளியதை இவர் செவியுறவும், தன் எதிரில் ஜோதிமயமாய்த் தோன்றியதைத் தொடர்ந்துசென்றார், மூன்னால் ஸ்ரீபகவான் நடந்தேகுஞ் சந்தடியின் தன்மைபோலக்காட்டியழைத்துக் கொண்டே சோணாட்டைடைந்து, மலையாள க்ஷேத்திரத்திலே, புருஷோத்தமராகிய ஸ்ரீபகவான், பெரியரூபத்தோடு யோகநித்திரையி லமர்ந்து இவருக்குத் தெரிசனத்தையும் முக்தியையுங் கொடுத்தருளினார்.

பகவத்தியானம் சிந்தையுட் பரிபூரணமுற்று ஜொலித்த இம் மகரிஷிக்குத் தெரிசனந் தந்தருளவேண்டி, ஸ்ரீ ஆதிமூலப்பொ

ருளாகியபகவான் அநந்தபத்மநாபர் எனப்புனைப்பெயர்பூண்டு, சயனத்தமர்ந்த திவ்யஸ்தலமே திருவனந்தபுர க்ஷேத்திரம்.

ஸ்ரீபகவான் சயனத்தமர்ந்து இவருக்குக் காட்சி தந்தருளிய காலத்தில் மூன்று நகருக்குச்சரியாகப் பெரிய ஆகிருதியான திருவுருவத்தோடு தோன்றியிருந்தன ரெனுமான்றோர் மொழிக்கேற்ப, இப்பொழுது மூன்று திருவாயில்களுள்ள கர்ப்பக்கிரக மளவாகத் திருவுருவந்துறுகி முதல் திருவாயிலால் திருவடிக்கமல தெரிசனமுந் தந்து உலகத்தை இரட்சிக்கத் திருக்கோவில் கொண்டெழுந்தருளி விளங்கிவருகின்ற அவருக்கு, அன்னுளிலிந்த மகரிஷி பச்சரிசி, மாங்காய், வாழைப்பழம், வைத்து நைவேத்யஞ்செய்து பூஜித்துவந்த பிரகார மின்றைக்கும் முதலில் நடத்திப்பின் பால், பரமான்ன நைவேத்யமுஞ் சால விமரிசையாக நடந்தேறி வருகின்றதென்பது யாவர்க்குஞ் சொல்லாமலே நன்கு விளங்கும். சுபம்

வ. சி. நா. சிதம்பரம்பிள்ளை.

தர்மம்.

(சகூ0-வது பக்கத்தொடர்ச்சி).

ஓ சிங்கமே! நான் க்ஷத்திரியன். கஷ்டமடையும் பிராணியை அதினின்றும் காப்பாற்றுகிறவனென்று அப்பதத்தின் அர்த்தம். இப்போது இந்தக்கஷ்டமடையும் பசுவைக் காப்பாற்றுமற்போயின் எனக்கு அப்பதம் அர்த்தமில்லாமற்போய் விடும். அப்படி நிரர்த்தகமாய் இருக்கும் இந்த சரீரத்தினால் ஒருவனுக்கும் உபகாரமேற்படாது. அத்தகைய சரீரத்தை நான் லக்ஷ்யம் செய்யமாட்டேன். ஆதலபற்றி தயவுசெய்து இந்த என் சரீரத்தை உபயோகப்படுத்திக்கொண்டு இந்த குருவின் பசுவை விட்டுவிடென்று தலையைக்குனிந்து வணங்கினான். உடனே சிம்மமும் அப்படியானால் உன்பேரில் நான்

பாய்கிறேனென்றது. அதைக்கேட்டு மிகுந்த சந்தோஷத்துடன் அதனிடம் நெருங்கி வணங்கி நின்றபோது ஆகாயத்தினின்றும் புஷ்பமாறி பொழிந்தது. நிமிர்ந்துபார்த்தான், சிங்கமில்லை, நந்தினி மிகப்பிரகாசத்துடன் நிற்பதைக்கண்டான். இதென்ன அதிசயமென்று திகைத்து நின்றபோது அப்பசு அரசனை நோக்கி, குழந்தாய் பயப்படாதே. என்னிடம் சிம்மம் வரவில்லை. எல்லாம் பொய். உன் பக்தியைச்சோதிக்க இம் மாதிரி செய்தேன் என்று சொல்லி அனுக்கிரகம் செய்தது.

அறிஞர்களே! இந்தக் கதையினின்றும் நாம் அறிந்து கொள்ளவேண்டிய தென்னவென்றால், அவனவன் ஸ்வதர்மத்தைக் கைவிடாமல் வேதசாஸ்திர குருவாக்யங்களுக்கு மிகவும் கீழ்ப்படிந்து நடந்தால் மனிதர்களாலேற்படும் கஷ்டமல்ல, தேவர்களாலும் பிராரப்தகன்மங்களாலு மேற்படக்கூடிய துன்பம் யாவும்விலகிப் பரமசுகத்தை அடைந்து தன்னைச்சேர்ந்த யாவரும் உலகமுமே சுகம்பெறும் என்று ஏற்பட்டது. திலீபன் குருவாக்கியத்தை அனுசரித்தான், க்ஷத்திரியன் என்ற ஜாதி அபிமானத்தை நன்கு மதித்தான். இப்படிப்பட்ட தர்மத்தை அனுஷ்டித்துவந்தால்தான் சமயத்திற்குத் தக்கபடி தர்மவிரோதமின்றி யுக்தி சமாதானங்களும் தோன்றும்.

பாருங்கள். சிபி என்ற சக்கரவர்த்தியின் தர்ம நிலையைப் பரீக்ஷித்துப் பார்ப்பதற்காக ஒருசமயம் இந்திரன் கழுகு வேடம்பூண்டு புறாவேடம்தரித்த அக்னியைத் துறத்திச்செல்லவே அப்புறா மிகபயத்தை நடித்துக்கொண்டு மாடியில் உல்லாஸமாய் உட்கார்ந்திருந்த சிபியின் மடியிற் போய்விழுந்து ஐயா என்னைக்காப்பாற்றுங்கள் இதோகழுகு என்னை அடித்துப் புசிக்கவருகிதென்று கிடுகிடென்று நடுநடுங்கிக்கொண்டு அவன் மடிக்குள் நுழைந்துக்கொண்டு சொல்லிற்று. அதைக்கேட்ட அரசன்பயப் படாதே! புறாவே? உன்னைக் காப்பாற்றுகிறேனென்று அபய வாக்களித்தான். பிறகு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இந்திரக் கழுகுவந்தது. அரசனைப்பார்த்து. அரசே

राजन् भक्ष्यमिमं मुञ्च कपोतं क्षुधितस्यमे ॥

அரசனே பசிகொண்டஎனக்கு ஆகாரமான இந்தப்புரு வை விட்டுவிடு. என்றது. அதற்கு அரசன் ஓ கழுகே என்னிடம் வந்து சரணமடைந்த இதைவிடமாட்டேன். சரணமடைந்த வனைத் தள்ளுவது தர்மத்திற்கு விரோதம் என்றான்— அதற் குக் கழுகு.

धर्मात्मानं त्वाहु रेकं सर्वे राजन् महीक्षितः।
सर्वधर्मविरुद्धं त्वं कस्मात्कर्म चिकीर्षसि ॥
विहितं भक्षणं राजन् पीड्यमानस्य मेक्षुधा।
मारक्षोधर्मलोभेन धर्ममुत्सृष्टवानसि ॥

அரசனே? உன்னை உலகில் எல்லாராஜாக்களும் தர்மாத் மாவென்று கூறுகின்றனர். அத்தகைய நீஎவ்விதம் தர்மத் திற்கு விரோதமான காரியத்தைச் செய்யவிரும்புகின்றீர். அர சனே? பசியால் வருந்துகிற எனக்கு இது ஆகாரமாய்க் கடவு ளால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது- தர்மத்தில் ஆசையினால் இதைக் காப்பாற்றாதே. அப்படியாயின் தர்மத்தை விட்டவ னாய் ஆவாய் என்றது. இதைக்கேட்ட அரசன் கழுகைப்பார் த்துக்கழுகே? உன்னிடமிருந்து இப்புரு மிகப்பயம் கொண்டு என்னிடம் சரணமடைந்துவிட்டது. ஆகவே அபயத்தை வி ரும்புகின்ற இப்புருவுக்கு ரக்ஷணையைக் கொடுக்காவிடில் எனக் கு என்ன தர்மம் நேரிடுமென்பதைப்பார். ஆனதால் இதை உ னக்குக்கொடுப்பது பரம அதர்மத்தில் முடியு மானதுபற்றி நான் விடமாட்டே னென்றான். பிறகு கழுகுசொல்லிற்று. அரசே? உனக்கு தர்ம ரகஸ்யத்தைச் சொல்கிறேன்கேள். உல கில் ஸமஸ்தப் பிராணிகளும் ஆகாரத்தினால் உண்டாகின்றன. ஆகாரத்தினால்தான் வளர்கின்றன. அதனால் ஜந்துக்கள் ஜீவிக்கி ன்றன. மற்ற எதையேனும் தள்ளிவிட்டு ஒரு பிராணி வெகு

காலம் ஜீவிக்கும். சாப்பாட்டை விலக்கிவிட்டுக் கொஞ்ச நேரமும் சுகமாய் இருக்கமுடியுமா? அரசனே இந்த ஆகாரத்தைவிட்டு என்னை நீவிலக்குகிறுய். இதனுல் என் உயிர் இவ்வுடலை விட்டு இப்போதே புறப்பட்டு விடும்போலிருக்கிறது. தர்மாத்மாவோ அப்படி நானிறந்தால் எனதுமனைவி குழந்தைகளும் நசித்துப்போம். இவ்விதம் புருவின் ஒரு பிராணனைக் காப்பாற்றப்போக அநேக பிராணனை வதைசெய்யப்போகிறுய். ஆதல்பற்றி.

धर्मं यो बाधते धर्मो न स धर्मः कुवर्त्म तत् ।
अविरोधात्तु यो धर्मस्स धर्मः सत्यविक्रम ॥
विरोधिषु महीपाल निश्चित्य गुरुलाघवम् ।
न बाधा विद्यते यत्र तं धर्मं समुपाचरेत् ॥
गुरुलाघवमादाय धर्माधर्मविनिश्चये ।
यतो भूयांस्ततो राजन् कुरु धर्मविनिश्चयम् ॥

ஒரு தர்மத்தை மற்றொரு தர்மம் இடையூறு செய்தால் அது தர்மமாகாது அது செட்டமார்க்கம்தான். ஓ ஸத்யவிக்ரமனே: இடையூறில்லாமல் எது இருக்கிறதோ அதுதான் தர்மம். ஓ அரசனே? விரோத முள்ளவைகளாய் ஒன்றுக்கொன்று நேர்ந்தால் பெரிது சிறிதை கவனித்து எதில் விரோதமில்லாமலிருக்கிறதோ அந்த தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும். தர்மாதர்ம நிச்சயத்தில் பெரிது சிறிதைக் கவனித்து எதில்கௌரவம் உண்டோ அந்ததர்ம நிச்சயத்தைச் செய்யவேண்டும். என்று சொன்னவார்த்தையைக்கேட்டு அரசன் அந்தபக்ஷியைப் பார்த்து ஓ கழுகே? நீபக்ஷிகளுக்கரசனுன கருடனு? மிக அழகான தர்மங்களை நன்கு எடுத்துரைக்கின்றுயே. நீஎல்லா தர்மமும் தெரிந்தவனுப் இருப்பதால் உன்னிடம் பேசுகின்றேன். உனக்குத்தெரியாத தொன்றுமில்லை. இருக்கட்டும்.

உன் தர்மத்தில் சரணமடைந்தவனையும் தள்ளிவிடலாம் அது பாபமாகாது, தர்மம்தான் என்றிருக்கிறதோ? நீ இவ்வளவு அழகாய்ப் பேசுவதெல்லாம் இப்புறாவால் உன் வயிற்றை நிறப்பிக் கொள்ளத்தானே ஏற்படுகிறது இதற்காக நீ இவ்வளவு பாடுபடவேண்டாம். உன் ஆகாரம் இதனு வில்லாவிடினும் காட்டிலுள்ள எவ்வளவோ மிருகவிசேஷங்களாலும் செய்து கொள்ள முடியும். ஆனதால் தயவுசெய்து போய்வாவென்றான். அதைக் கேட்ட கழுகு, அரசனே? இந்த வீண் வார்த்தை எதற்கு, நான் காட்டிலுள்ள மிருகங்களைத் தின்னமாட்டேன். எனக்கு இந்தப்பக்ஷி தெய்வத்தினுற் கொடுக்கப்பட்டது. மற்றும்கழுகு புறுவை விசேஷமாய்த் தின்னுமென்பது உனக்கும் தெரிந்திருக்கும். ஆகவே இதைக்காப்பாற்றுவதில் உனக்கு தர்மமில்லை என்றது. பிறகு இதைக்கேட்ட் அரசன் கடைசிவரையில் சரணமடைந்த பக்ஷியைக் கொடுக்கமாட்டேனென்றும் அதற்கு பதிலாக நீஎதைக்கேட்டாலும் கொடுப்பேனென்றும் சொன்னதைக் கேட்டு அதற்குத்தகுந்த நிறையுள்ள உன் தேகத்துமாம்ஸத்தை அறுத்துக்கொடென்று சொல்லவும் அப்படியே அவன் செய்ய ஆரம்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாய் மாம்ஸத்தை அறுத்துப் போட்டும் புறுவின் நிறைக்குச் சரியாகாமல் கடைசியில் தன் தேகத்தில் மாம்ஸமில்லாமையால், தானே ஏறி தராசில் உட்கார்ந்தான். கொஞ்சமும் வருத்தமடையவில்லை. சிரித்தமுகமாய் இருந்தான் அதைப்பார்த்து அக்கழுகு.

इन्द्रोऽहमस्मि धर्मज्ञ कपोतो हव्यवाडयम् ।
जिज्ञासमानौ धर्मं त्वां यज्ञवाटमुपागतौ ॥

ஏ தர்மமறிந்தவனே? நான் இந்திரன், இந்தப்புறு அக்னி உன்னுடைய தர்மநிலையை அறிய நாங்கள் உனதுயாகசாலையை அடைந்தோம். என்று சொல்லிப்பிறகு அவனுக்கு சாசுவதமான லோகங்களைக் கொடுத்தார்களென்றிருக்கிறது. இக்கதையினுல் சிபிசக்கிரவர்த்தியின் தர்மநிலையைப் பார்த்தீர்களா

இக்காலத்திய நமக்கு தர்மஸ்வரூபம் தெரியுமா. நாம் இப்போது யார் எதைச்சொன்னாலும் அவர்களைப் பெரியோர்களென்றும் மகாத்மாவென்றும் நாம் அவன் சொன்னபடிதான் நடக்க வேண்டுமென்று புத்தியை நிமிஷம் திருப்பிவிடுவோம். அதிலாவதுஸ்திரமாய் இருக்குமா. நாளை இன்னொருமகாத்மா வந்துவிடுவார். நமதுபுத்தி அப்போது திரும்பத்தயார். இப்படியெல்லாம் ஸ்திரமில்லாத தர்மத்தை அனுஷ்டிக்கிற நம்மாலா இவ்விந்தியா முன்னுக்குவரப்போகிறது.

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

ஸ்ரீ ராமவிஜயம்.

யுத்தகாண்டம், அத்தியாயம் 1.

(கருஎ-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீஸீதாதேவியின் பரிபூர்ண கடாக்ஷங்களைப்பெற்று அண்டின நமக்கெல்லாம் அஷ்டலக்ஷ்மீவிலாஸங்களையும் அபிவர்ஷித்து வரும் ஆஞ்ஜனேயமூர்த்தியின் புத்தியையும் பக்தியையும் விநயத்தையும்,வீர்யத்தையும்,சக்தியையும்,ஸாமர்த்தியத்தையும் ஸ்ரீ ராமன்மென்மேலும் மெச்சினார். "சொன்னபடி எல்லாம்செய்து சொல்லாத காரியங்களையும் ஊகித்தறிந்துகொண்டு காரியங்களைப் பாக்கியில்லாமலும் பழுதில்லாமலும் பூர்ணமான பலன்களுடன் நிறைவேற்றிவருபவன் உத்தமதூதனெனப்படுவான். சொன்னபடிமாத்திரம் செய்து மேலாக வேண்டியவற்றை யோசித்துச்செய்யாமல் வருபவன் மத்யம தூதனாவான். சொன்னபடியும் செய்யாமல் வருபவன் அதமதூதன். விபரீதமாய்ச் செய்யும் தூதன் அதமாதமன். ஆஞ்சனேய! நீர் உத்

தமோத்தமனான சகாயனைக் கிடைத்தீர். சுக்ரீவனுக்கு சுகத்தையும் லக்ஷ்மணனுக்கு ஆனந்தத்தையும் எனக்குத் தைர்யத்தையும் ரகுகுலத்திற்குக் கீர்த்தியையும் உமக்கு எல்லாவற்றிற்கும் மேலான ஆத்மலாபத்தையும் சுலபமாய் சம்பாதித்தீர். ப்ரசண்டனான ராவணன் முன்போய் அவனைத் திரணமாய் எண்ணிப்பேசி லங்கையைக் கலகலக்கச் செய்து திரும்பிவந்த உம்மை எங்கள் பெரியோர்கள் செய்த புண்யங்களால் ஒரு குறைவுமில்லாமல் மறுபடி பார்க்கலானேன். மகாசாதுவும் மதுரபாஷணியும் ஜனகமகாராஜன் செல்வமுமான என் சீதைக்கு உயிர்பிச்சை கொடுத்து ரக்ஷித்து வந்தீர். இனி தாமதியாமல் சத்ருக்களை ஜயிக்க நாம் புறப்பட வேண்டியதுதான். நல்லது, ராவணனது ராஜதானியை நேரில்பார்த்து வந்தீரே. அது எவ்விதமானது? அது எவ்விதம் காக்கப்படுகின்றது? சிரமமில்லாமல் சொல்லக்கூடுமானால் இதற்குப்பதில் வேண்டுகின்றேன்" என்று ஸ்ரீராமன் ஆதரவாய்க்கேட்க ஹனுமான் சொல்கின்றார்.

"ப்ரபோ! சொல்கின்றேன். கேளுங்கள், லங்கையென்பது ஆனந்தமயமான ஒரு லோகம், அது ராவணனது புண்யபரிபாகம். வஜ்ரகடினமானது. அங்குள்ள அரக்கர்களின் தேகம் அவர்களுக்கேஏற்றது. அங்குகிடைக்கும் அபரிமிதமான மோகம் மலைபோன்ற யானைகளும் பர்வதாகாரமான ரதங்களும் அந்தரத்தில் பறக்கும் குதிரைகளும் கணக்கில்லை வழக்கில்லை. என்னகெட்டியான கோட்டை? என்ன விசாலமானபாட்டை! என்ன சட்டடங்களின் பணிக்கு! என்ன மண்டபங்களின் ஒழுங்கு! என்ன ஆர்ப்பாடம்! என்ன தளவர்டம்! கோட்டை வாசல் கதவுகளோ கல்பகாலத்திலும் அசையா. அதன் கீல்களுக்கு என்ன விசையோ? நிலைகளுக்கு எங்குதலையோ! ஒன்றும் புரியவில்லை. எல்லாம் இந்திரஜால மஹேந்த்ர ஜாலமாயிருக்கிறது. கோட்டை வெளிப்புறத்தில் என்ன வேலைப்பாடு செய்திருக்கிறார்கள்? எவ்வளவுகோடி ஸைன்யங்கள்வந்தாலும் அவைகளை.எல்லாம் ஒரே தூக்கலாய் தூக்கி சின்னபின்னமாய் வாறி இறைத்து விடக்கூடிய யந்திரங்கள் திக்குதிசை தெரியாமல்

இங்குமங்கும் மறைவாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது போதாதென்று இவற்றைச்சுற்றி ஜலரூபமாயும் மலைவடிவாயும் வனம் போன்றதும் உருப்புரியாமலும் வெவ்வேறான மதில்களும் அகழிகளும் காணப்படுகின்றன. வண்டிகள் போகாது. ஓடமும் செல்லாது தாண்டவும் இயலாது. நிற்கவும் இடமிராது கூட்டம் கூட்டமாய் வ்யூகம் வ்யூகமாய் வகுக்கப்பட்டு ஆயுதபாணிகளாய் இராப்பகல் அதனைக்காக்கும் அதிரதமகாதர்களின் சங்கியையோ அளவில்லை. பக்ஷியும்பறந்து செல்ல முடியாத செங்குத்தான மலையுச்சியில் அந்தரத்தில் மாட்டிவிட்டதுபோல் லங்கா நகரம் அமர்ந்து காணப்படுகின்றது. ராவணன், உட்கார்ந்தபடி, வரும்சத்ரு சைன்யத்தைப் பார்ப்பதற்காக மண்டபமொன்று நகரமத்தியில் கட்டப்பட்டிருக்கின்றது. அதன் விசித்திரத்தை ஆதிசேஷனும் வர்ணிக்கமுடியாது.

"இவ்வளவு தூரம் இதன் பெருமையைச் சொல்கிறேனென்று கோபிக்கவேண்டாம், ராகவ! இதுதான் முதன்முதல் அங்குபோனபோது அஃதிருந்த விதத்தைச் சொன்னதாகின்றது. தங்கள் அனுக்கிரகத்தால் நான் கொஞ்சம் விளையாடியதில் இப்பொழுது அவையெல்லாம் ஒரே தரையாய்விட்டது. ராவணனது மண்டபமிருந்த இடம் இத்தனைநாளில் புல்மண்டிப்போயிருக்கும். கோட்டைகளை இடித்து அகழிகளில்கொட்டிப் பறப்பிவிட்டுத்தான் மறுகாரியம் பார்த்தேன். காட்டை மேடாக்கினேன். மேட்டைக் காடாக்கினேன். ஸ்தலத்தை ஜலமாக்கினேன். ஜலத்தை ஸ்தலமாக்கினேன். லங்கை முழுமையும் அக்கினிபகவானுக்கு ஆகுதியாய் அளித்து வந்தேன். தங்கள் விக்ரமத்திற்கிடம் வேண்டுமேயென்றுராவணாதிகளான முக்யர்களை பாக்கி வைத்து வந்தேன். அங்கதன் முதலான வீரர்களின் பராக்கிரமத்திற்கும் கொஞ்சம் வழி வைத்திருக்கிறேன்" என்று ராகவனுக்கு கர்ணாமிருதத்தை வார்த்தார்.

ஸ்ரீராமன் சுக்ரீவனைப் பார்த்து "புறப்படலாமோ? என, சுக்ரீவன் ஸைன்யங்களுக்கு ஆக்ஞாபித்தார். ஆனந்தபரவச

மாய் வானரவீரர்களெல்லாம் "நான் முன்னே நான் முன்னே" "நானே ராவணனை எதிர்ப்பேன்" "நான் ஹனுமானுக்கும் இடங்கொடேன்" "எங்கள் ஸ்ரீராமன் ஜயம் பெற்றதும் நானே ஸீதாதேவியிடம் இந்த சுபசங்கதியை முன்னால் ஓடிப்போய்ச் சொல்வேன்" என்று பேசிக்கொண்டு முன் வந்தார்கள். சுகமாய்க் காற்று வீசியது. வழியிலுள்ள மரங்களும் கொடிகளும் பூக்கள் பழங்கள் தேன்களால் நிரம்பி கிருகஸ்தர்கள் போல் இவ்வானரர்களென்ற அதிதிகளை விருந்துக்கழைத்தன. ஆறுகளெல்லாம் தெளிந்தோடின. ஸ்ரீ ராமனுக்கே ஜயம் ஜயம் என்று சொல்வதுபோல் கருடன் ஆகாசத்தில் வட்டமிட்டுக்கொண்டு த்வனித்தார். ஸ்ரீராமன் நீலனை அழைத்து "சேனாதிபதியே! நீர் முந்திபோய் வழியைச் செப்பனிடவேண்டும். துஷ்டர்களான ராக்ஷஸிகள் வழியிலுள்ள ஜலங்கள், பழங்கள், கிழங்கு காய்களில் விஷம் கலந்திருப்பார்கள். ஆங்காங்கு படுகுழிகளையும் பாழுங்கிணறுகளையும் மண்ணிட்டு மறைத்து சமநிலம்போல் காண்பித்திருப்பார்கள். புதர்களிலும் குகைகளிலும் இண்டு இடுக்குகளிலும் ஆயுதபாணிகளாய் அவர்கள் ஒளிந்துகொண்டுமிருப்பார்கள் இதையெல்லாம் நன்றாய் கவனித்துப் பார்த்து கிராமநகரங்களுக்கு இடைஞ்சலில்லாத இடங்களில் நமது ஸைனியங்கள் செல்வதற்கு விசாலமான பாட்டைகளை ஏற்படுத்தவேண்டும். ஸைனியங்கள் கோர்வையாய்ப் பந்தி பந்தியாய்ச் சேர்ந்து செல்லவேண்டும். கஜன் முதலானவர்கள் முன்னும் ரிஷபன் முதலானவர்கள் வலத்திலும் கந்தமாதனன் முதலானவர்கள் இடத்திலும் ஜாம்பவான் முதலானோர் பின்னுமாய் வரட்டும். ஹனுமான்மீது நானும் அங்கதன்மீது லக்ஷ்மணனும் ஏறிக்கொண்டு மத்தியிலிருந்து எல்லோரையும் உற்சாகப் படுத்திக்கொண்டு வருவோம் என்று திட்டம் செய்தார். வானரவெள்ளங்கள் எள்விழற் கிடமில்லாது திரண்டன. ஆகாயம் பூமியெங்கும் அவர்களால் நிறைந்து இருண்டன. சிலர் நடந்தும் சிலர் பறந்தும் சிலர் ஓடியும் சிலர் குதித்துக்கொண்டும்சென்றனர். பர்வதங்களையும் மரங்களையும்பெயர்த்தெடுத்துப்

பந்தாடிக்கொண்டு அட்டகாசம் செய்துவரும் இவ்வானரர்களின் கால்களால் மிதியுண்டு உலகெல்லாம் மண்பறந்தது. சமுத்திரங்கள் புறண்டுவருவதுபோல் எல்லோரும் குடகுமலையினருகில் வந்து கூடினார்கள். மரங்களில் ஏறிப்பழங்களைப் பிடுங்கிப்பிடுங்கி புசித்தார்கள். சுனை நீர்களை அள்ளி அள்ளிக்குடித்தார்கள். செந்தேனை வாய் நிறம்பக்குடித்துக் கொட்டமடித்தார்கள். மறுபடியும் புறப்பட்டு வனங்களையெல்லாம் கடந்தார்கள். சிங்கம் புலி காடிகளெல்லாம் இவர்களைக்கண்டதும் அரண்டோடின, பக்ஷிகள்பயந்து காச்சுமூச்சென்று கூச்சலிட்டன. வனங்களைத்தாண்டி மகேந்தர பர்வதத்தின். சாரலில் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீராமன் அந்தகிரியின் மேலேறி அபாரமான தக்ஷிண மகா சமுத்திரத்தைப் பார்த்தார் திமி திமிங்கிலங்களுடன் கன்னங்கரேலென்று கரைபுரளும் ஆழியைப்பார்த்து வியந்து மறுபடியும் கீழேஇறங்கி வானரர்கள் சூழ்ந்துவர சமுத்திரத்தின் கரையை ஸ்ரீராமன் அணுகினார். இதனை எப்படித் தாண்டுகிறதென்று பெருத்த கவலைகொண்டார். வானர வெள்ளங்கள் அலைமோதிக்கொண்டு கரையில் நின்றன. சமுத்திரமோ தளும்பித் தளும்பித் தத்தளித்தது. நீலமான ஆகாயத்திற்கும் நீலமான சமுத்திரத்திற்கும நீல நீலமான வானரசைந்யத்திற்கும் ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. "கரையில் ஒன்று, நீராய்ஒன்று அந்தரத்தில் ஒன்றாய் மூன்று சமுத்திரங்கள் காணப்படுகின்றனவே. ஏதேது! மூன்றும் சேர்ந்து விட்டதே. உலகங்களுக்குப் பிரளயகாலம் வந்துவிட்டதோ" என்று தேவரும் யாவரும் மயக்கமுற்றார்கள். நுரைக்கட்டிகளை நக்ஷத்திரங்களென்றும் நக்ஷத்திரங்களை நுரைக்கட்டிகளென்றும் பிரமிக்கலானார்கள். வானரவீரர்கள் கூச்சலும் சமுத்திரத்தின் இறைச்சலும் கடல் நீரையுண்டு கர்ஜிக்கும் மேகங்களின் ஆரவாரமும் ஒன்றுகூடி உலகைச் செவிடாக்கின.

(இன்னும்வரும்.)

ப. கி. கல்யாணராம சாஸ்திரிகள்.